Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய௵ மாசிமீ ௮உ (19-2-39) { இல. 18

## ஆசிரியர்களும் தற்காலக் கல்வியும்

உலகம் நாளுக்குநாள் மாற்றம் அடைந்து வருகின்றது. அம்மாற்றத்திற்கேற்பக் கல்வி முறைகளும் மாற்றமடைவது அவசியமாகும். மேலைத்தேசங்களில் இம்மாற்றம் நடைமுறையில் ஏற்பட்டுவிட்டது. கீழைத் தேசங்களிலும் விரைவில் மாற்றம் ஏற்படும்.

* * *

கல்வி விஷயங்களில் ஈடுபடும் உபாத்தியாயர்களே கல்விமுறைகளின் நய நட்டத்தை எடுத்துக்கூற வன்மையுடையர். கல்விமுறையைத் திருத்தும் உரிமையும் அவர்களுடையதே. ஆதலின் உபாத்தியாயர்கள் உலகமாறுதல்களுக்கிணங்கக் கல்விமுறையைத் திருத்துவதில் கண்ணுங் கருத்துமுடையவர்களாய் இருக்க வேண்டும்.

* *

உலகத்தில் எப்பகுதியிலும் யுத்தக் கிளர்ச்சி இருப்பதைக் காணலாம். தருமம் குன்றுவதையும் அதர்மம் வளருவதையும் யாவரும் அறிவர். இந்த நிலைக்கு உலகம் வருவதற்கு உபாத்தியாயர்களும் ஓரளவிற்குக் காரணராவர். தர்மத்தை அடிப்படையாக வுடைய கல்வியைக் கற்பித்தால் மாணவர்களும் தர்மத்தின் ஒப்புயர்வில்லாச் சிறப்பை ஓர்ந்து மறநெறி யொழுகாது அறநெறி நின்று தர்ம கைங்கரியங்களில் ஈடுபடுவர். நமது நாட்டிற்குச் சிறப்புடைக் கல்விமுறை எதுவோ அதை நடைமுறையிற் கொண்டுவரவேண்டும். அரசினரையும் தங்களுடைய எண்ணத்துக்கு இணங்கச் செய்யவேண்டும்.

வித்தியாதரிசி திரு. சாமுவேல் அவர்கள் யாழ்ப்பாணத் தமிழாசிரியசங்க வருடாந்தக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் சமயக் கல்வியின் அவசியத்தை எடுத்துக் கூறினர். உலகம் கெட்டுப்போனதற்குக் காரணம் தக்க சமயக் கல்வியின்மையே என்பதை நன்கு வற்புறுத்தினர். மாணவர்களைச் சமய வழிபாடுடையவர்களாக இருக்கச் செய்வது, ஆசிரியர் கடமையாகும். ஆசிரியர்கள் தாமும் கடவுள் வழிபாடுடையவர்களாக இருத்தல் அவசியம் என்பதையும் நன்கு விளக்கினர்.

* *

அதே கூட்டத்தில் 'அகத்தின் லீலை' என்ற பொருள்பற்றி சிறந்த தொரு சொற்பொழிவை நிகழ்த்திய வித்தியாதரிசி திரு. சோமசேகரமவர்கள், அகத்தின் லீலைகள் பலவற்றையும் எடுத்துக்காட்டி அவற்றை நன்கறிந்தாலன்றி உபாத்தியாயர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றமாட்டார்கள் என்று கூறினர். அகத்தைப் பண்படுத்துந் தொழிலிலேயே ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். ஆகையால் அகத்தின் தன்மையை அவர்கள் நன்கறிதல் அவசியமாகும்.

* *

ஆசிரியர்கள் தங்கள் தொழிலை மேலானதென்றும், அத்தொழிலை முறைப்படி நடத்தினால் உலகம் சிறந்தோங்கும் என்றும் நம்பிக்கை பெரிதுமுடையராயிருத்தல் வேண்டும். சம்பளம் நோக்கியாவது, வேலை உயர்ச்சி நோக்கியாவது செய்யும்வேலை உண்மை வேலை யாகாது. ஆசிரியத் தொழிலில் அபிமானம் வைத்தாலன்றி ஆசிரியத் தொழில் சிறக்காது.

*

ஆசிரியர்கள் ஒன்றுகூடி கல்வி விஷயங்களையும் தங்கள் அனுபவங்களையும் ஆராய்தலும் கல்வி விருத்திக்குக் காரணமாகும்.

---

<u>சிறு கதை</u>

# "பூதன்"

ந. கந்தசாமி (181)

**1**

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?........."

ஊர்ப்புறத்திலுள்ள ஒரு மாந்தோப்பு. அதனிடையே ஒரு சிற்றாறு இன்னிசை பாடித் தவழ்ந்து சென்று கொண்டிருந்தது. ஆற்றின் இருகரையும் நாணலும் கோரையுமாய் ஒரே காடாய்க் கிடந்தது. அதற்கப்பால் ஒரு காளிகோவில். கோவிலைச் சுற்றியிருந்த மதில் பெரும்பாலும் இடிந்து கிடந்தது. உள்ளிருந்த காளியின் கண்கள் உடைந்தும் கால்கள் முறிந்துமிருந்தன. அந்த முடக் குருட்டுக் காளி கோவிலின் முன்பு ஒரு சிறுவன் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது சுமார் 10 மணியிருக்கலாம். சூரியனும் வெகுமும்முரமாக வெயில் காய்த்துக்கொண்டிருந்தான்.

முற் கூறப்பெற்ற சிறுவனுக்கு 18 வயதிருக்கலாம். கருணை, வீரம், தியாகம் என்ற முச்சுடர்களும் அவனது வதனத்தில் ஜ்வலித்தன. அழகுமணிப்பூ அவனது முகாரவிந்தத்தில் அறிவு மணத்துடன் கலந்து விளங்கிற்று. அவனை ஒரு அழுக்கேறிய கௌபீனமே அலங்கரித்தது.

முன்னர் கூறியபடி மேய்த்துக் கொண்டிருந்த அப்பையன் கோவில் சுவரோரத்தில் இருந்த நாவல் மரமொன்றில் ஏறி உட்கார்ந்து ஆனந்தமாகப் பாடத் தொடங்கினான். "சூர்...... சூர்" என்றசப்தத்துடன் மரக்கிளைகளிலிருந்து குதித்தது ஒரு குரங்கு. அதற்கு இரண்டு நாவல் பழங்களைப் போட்டுவிட்டு மீண்டும் பாடிக்கொண்டே போனான். சுற்று முற்றும் நோக்கிய அவனது கண்கள் கோயிலினுட்பாகத்தை நோக்கின.

**2**

"......... ..............என்றும்
ஆரமுதுண்ணுதற் காசையுற்றோர்கள்ளில்
ஆசைப்படுவாரோ?......

உட்புறத்தில் ஒரு 'தாடிவாலா' உட்கார்ந்திருந்தார். பரந்தமுகமும், கருணை யலையெறி கண்களுங் கொண்ட அவர் 'தாரகை நடுவே தண்மதிய' மென்னச் சில ராணுவ வீரர்களின்நடுவே வீற்றிருந்தார். எல்லோரும் ஒரே அமைதியில் ஆழ்ந்து கிடந்தனர்.

திடீரென "ஆ! இதில் யார் அதைச் செய்வீர்கள்?" என்றாரவர். எங்கும் அமைதி நிலவிற்று,

"என்ன? உம்மிடம் வீரமென்பதே யில்லையா? ஹா! மதுரை அந்நிய அரசனுக்குப் பணியவும் காலமா?' என்று அவர் கூறும்பொழுது கண்ணீர் ஊற்றெடுக்குந் தறுவாயில் கண்கள் தத்தளித்துக் கலங்கின. மீண்டும் முன்போலவே அமைதி.

அரசர் பின்னரும் ஒருதரம் முந்திய கேள்வியையே திருப்பிக் கேட்டார். உடனே இரண்டு குரல்கள் ஏககாலத்தில் கிளம்பின.

"அரசே! அங்குச் செல்வதென்ன சுலபமா? அத்தனை கட்டுக்காவலையுங் கடந்து செல்லல் முடியுமா? யோசித்துப் பாருங்கள். அல்லாமலும் நீர் கோரியபடி நெருப்பு வைத்தல் எங்ஙனம்?.........."

"சே! உம்மிடம் வீரமில்லை. கோழைகள்!" என்றாரரசர் வெறுப்புடன். அவரது கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்துப் பிரவாகித்தது.

மேலும் மப்பையனால் தாங்க முடியவில்லை. ஒரே தாவு! அடுத்த கணம் அரசர் முன்னிலையில் நின்றான். அரசரும் ஏனையோரும் ஆச்சரியத்தால் கண்ணை அகல விழித்தார்கள்.

அரசர் "நீ யார்?" என்றார், கம்பீரத்வனியில்.

"அதைப்பற்றிப் பின்னர் பேசலாம். இப்போ என்னால் உமக்கென்ன ஆக வேண்டும்? அதனைச் சொன்னால் நான் கட்டாயம் வெற்றி பெறும்வரை முயற்சி செய்வேன்." என்றான் சிறுவன்.

அரசர் "ஆனால் ......"
பையன் "என்ன 'ஆனால்'?
"நீ சிறுவன்"

"மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம், உடல் சிறிய ரென்றிருக்க வேண்டாம்..........." ஆனால் உமது நோக்கம் என்ன?

அரசர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு "எதிரிகள் பாசறையில் நெருப்பு வைப்பதே எனது நோக்கம்" என்று கூறினர்.

"சே! சுத்தவீரன் இப்படியும் ......." என்றரு வருப்புடன் பேச ஆரம்பித்தான் அச்சிறுவன்.

"ஆம் நீ கூறுவதும் மெய்தான். ஆனால் பேசுமுன் யோசி. அவர்கள் நம்மை வெற்றி பெற்றது வெகு விநோதம். எம்மைத் திருவனந்தபுரம் அரசர் வரவழைப்பதாய்ப் பொய்த்தூது விட, யான் அதனை நம்பி அங்கு சென்றதும் வேறொருவனை விட்டு யான் திருவனந்தபுரம் போகவில்லை என்றும் ஏதோ காரணத்தைவிட்டு சேது சென்றேனென்றும், செல்லும் வழியில் ஏதோ ஆபத்தில் சிக்குண்டேனெனவும் பொய்கூறி அங்கிருந்த சேனையை எனக்குத் துணைக்காக அனுப்பிவிட்டு நகரத்தை முற்றுகையிட்டுக் கொண்டனர். இப்போ அது அவர்கள் வசம்தான்" என்றார் அரசர்.

"ஆகா! அப்படியாயின் குதூகலமாகச் செல்கின்றேன்" என்று சொல்லி விட்டு தாயிடம் விடை பெறுவதற்குச் சென்றுவிட்டான்.

**3**

அவன் ஒரு ஏழைப் பறைப்பையன். தகப்பன் மாரி போன வருஷம் சின்னமுத்து கண்டு இறந்துவிட்டான். தாய் தேவானையுடன் வசித்து வந்தான். அவனது பெயர்

நானே கருதின்வர நாடார்சும் மாவிருந்தால், தானே அணைவரவர் தன்மையென்றோ பைங்கிளியே.

பூதன். அவன் சாமாவையரின் வயலில் பண்ணைத் தொழில் பார்த்துக் கொண்டிருந்தான். சாமாவையர் தங்கமான மனிதர். பண்ணையாட்களிடம் எரிந்து விழமாட்டார்.

அன்று பின்னேரமே தாயிடம் விடை பெற்றுக் கொண்டு அரசரிடம் வந்து பாசறைக்குச் செல்லும் பாதையைப் படரூபமாக வரைந்துகொண்டு புறப்பட்டான்.

ஒரு மலைமேலேறிக் கடந்தால்தான் தலைநகரம் போகலாம். பூதனும் அம்மலைமேல்தான் போய்க்கொண்டிருந்தான். அம்மலையில் அடர்ந்த பெருங்காடொன்று. அக்காட்டில் ரோடியர் என்னுஞ் சாதியார் வசித்து வந்தனர். அவர்கள் நாகரீகமற்றவராயிருந்தபோதிலும் அவரிடம் அன்பு, இரக்கம், தயை என்னும் நற்குணங்கள் நிரம்பியிருந்தன.

பூதன் ஒரு சிற்றாறுடையண்டை வந்தான். நெடுந்தூரம் வந்த களைப்பினால் சிறிது தண்ணீர் அருந்திவிட்டுக் கரையிலுட்கார்ந்தான். ஆற்றின் தெற்கோரத்தில் ஒரு ரோடிய ஜாதிப்பெண் ஸ்நாநம் செய்துகொண்டிருந்தாள். சற்றுநேரம் இளைப்பாறிய பின்னர் தனது துண்டைத் தோய்த்துலரவிட்டுவிட்டு ஆற்றில் இறங்கி நீந்தலடிக்கத் தொடங்கினான். ஆ! என்ன பயங்கரமான சுழிவு! அதிலல்லவா அகப்பட்டுக்கொண்டான் பூதன். ஆ! ஆறடிச்சுக்கொண்டே போய்விட்டதா?

பூதன் சோர்வினால் மூர்ச்சை அடைந்து விட்டான். விழித்ததும் தன்முன் ஒரு பெண் நிற்பதைக்கண்டு திகிலடைந்தான்.

"நீ யார்?" என்றான் பூதன்.

"நான் இக்காட்டரசருடைய மகள். வாரும் குடிசைக்குப் போவோம். என்று மிகப் பணிவுடன் கூறினாள் அப்பெண்.

குடிசையண்டை நின்று கொண்டிருந்தார் நரேந்திரர். அவர் தீனரசர். அரசர் "இவர் யார்?" என்றார் தம்மகளை நோக்கி. பர்வதமும் நடந்த வரலாற்றைக் கூறி "அவரையே கேளுங்கள்" என்று கூறினாள். பூதனும் தன் விருத்தாந்தத்தைக் கூறினான்.

அன்று மாலை பர்வதம் தகப்பனிடம் மெல்லமாய்த் தன் கருத்தை வெளியிட்டாள். முதலில் அவர் சம்மதிக்கவில்லை. ஆனால் கரைப்பவர் கரைத்தால் கல்லுங் கரையுமல்லவா?

அடுத்தநாட் காலை திருமணம் நிறைவேறிற்று. மணமுடித்ததும் கணவனுடன் மனைவியை அனுப்பிவிடுவது அவர்கள் வழக்கம். பூதன் தான் மதுரைத் தலைநகர் சென்று வருவதாயும் பர்வதத்தை வருகையில் அழைத்துச் செல்வதாயுங் கூறிப் புறப்பட்டான்.

4

அன்றிரவு, ஊரடங்கிய சமையம். காமம், பொறாமை என்பவற்றைத் தவிர மற்றியாவு மடங்கியிருந்தன. உச்சிக்குமேல் பூரணசந்திரன் பவனி வந்துகொண்டிருந்தான். தூரத்தில் ஊளையிடும் நரியும் வளைகளில் விளையாடும் எலிகளுமே அந்நிசப்தத்தைக் கலைத்தன.

அரசாது பாசறையைச் சுற்றி சில ராணுவ வீரர் உலாவிக்கொண்டிருந்தனர் திடீரெனத் தீ எங்கும் பரவியது. பூதனது முகம் அந்நெருப்பி னொளியில் மலர்ச்சியுடன் பிரகாசித்தது. "பிடி உதை" என்பனபோன்ற குரல் ஏககாலத்தில் கிளம்பின. ஆனால் அவனைப் பிடிப்பதற்கு அவனங்கிருந்தாலல்லவா?

ராணுவ வீரர்களிலொருவனுக்கு பூதனது வீடு தெரியும். அவன் இன்னொருவனுடன் பூதனது வீட்டை நோக்கி நடக்கலானான்.

பூதனது குடிசை

"உண்மையைச் சொல். இப்போ வந்தவர்களெங்கே?" என்று கடூரமாக வினவினான் ஒரு ராணுவ வீரன், தேவானையைப் பார்த்து.

"இங்கு ஒருவரும் வரவில்லை" என்றாள் தேவானை. பெற்றமனம் எங்காயினும் தன்மகனைக் காட்டிக்கொடுக்க விரும்புமா?

பின்னரும் பலதரம் வற்புறுத்தி வினவினார்கள். ஆனால் அந்தத் தாயினிருதயம் சற்றாயினும் அசைந்துகொடுக்கவேயில்லை.

உடனே அவளைநோக்கி ஒரு துப்பாக்கிக்குண்டு வேகமாகப் பாய்ந்தது. அதுவரையில் மறைந்திருந்த வீரச்சிறுவன்—பூதன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தன் மார்பிலேற்றான். இன்னொரு வெடி. தேவானையினுயிரும் சாந்தி எய்தியது.

இக்கோரக் காட்சியைக் கண்ட பர்வதம் திகைத்து கல்லாய்ச் சமைந்துபோனாள் ஆனாலவளுக்கு மற்றக் கதா நாயகிகளைப்போல கண்ணீர் ஊற்றெடுத்தோடவில்லை. ஏனெனில், ஆம்; உண்மையான தியாகம் பூண்டவளல்லவா அவள்?

அப்போது வீதியால் சென்றுகொண்டிருந்த ஒரு ஆண்டி பாடிக்கொண்டு போகிறான்.

"தில்லை வெளியிலே கலந்துகொண் டாரவர்
திரும்பியும் வருவாரோ?......"

வெளிவந்துவிட்டது!
வெளிவந்துவிட்டது!!

விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய

**யாப்பிலக்கணம்**

(திருத்தமான பதிப்பு)

**விலை சதம் 35.**

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

நீர்க்குமிழி போன்றவுடல் நிற்கையிலே சாசுவதஞ், சேர்க்க அறியாமல திகைப்பேனோ பைங்கிளியே.

# நம்மூர்ப் பண்டிதர்

( வெறுங் கற்பனை )

எஸ். முருகானந்தன் (125)

மக்களுக்குள்ள முப்பத்திரண்டு குணங்களுள் இரண்டைத் தவிர மற்றைய யாவும் கனம் முருகேசுப் பண்டிதரிடம் அமைந்திருந்தன. அந்த இரண்டு குணங்கள் எவையெனில், 'நான்' என்ற ஆணவமும் மற்றவர்களை மதிக்காத ஒரு பெருமையும். இவை இரண்டும் அவரிடம் இல்லாவிட்டால் அவர் ஓர் அப்பாவி.

கனம் பண்டிதரவர்கள் பெயரளவில் பண்டிதரேயொழிய படித்தது மிகக் குறைவு. எமது வாயினின்றும் 'பண்டிதர்வாள்' என்ற பதம் வெளிவருமானால் அவர் உள்ளம் குளிர்ந்துபோகும். அவருடைய ஆசையின்படி பண்டிதர்ப் பட்டம் ஒருவாறு கிடைத்துவிட்டது. இதனால் ஒரு தனிப் பெருமை இருக்கத்தானே செய்யும்?

பண்டிதர்ப்பட்டம் கிடைத்தமாதிரி இவருக்குச் சிறிது பேச்சுவன்மையும் எங்கேயோ அகப்பட்டுவிட்டது. பின்பு சொல்லுவானேன்! ஆயுள்காலம் முழுவதும் தீபவொளி கிடையாத ஆலயங்களிலெல்லாம் இவருடைய பிரசங்கமயமாய்த்தானிருந்தது. எவரேனும் இவரைச் சிரமப்பட்டு அழைக்கத் தேவையில்லை. 'பிரசங்கம்' என்று விளம்பரமும் செய்யவேண்டியதில்லை. சர்வ சம்பவங்களும் இவராலேயே நிறைவேறிவிடும். இவருடைய பிரசங்கத்தில் ஒரு தனிச்சிறப்பு என்னவெனில், எந்த விஷயங்களைப் பேச எடுத்துக்கொண்டாலும் அவைகளின் முடிவு புலாலுண்ணாமைதான். இவர் ஒரு சைவம் என்று இவருடைய தேகத்தில் இலங்கும் பரந்த பட்டைநாமங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலப்படுத்தும். இவர் பிரசங்கத்தை ஒருமுறை கேட்டவர்கள் மறுமுறை கேட்க விரும்புகிறதென்றால் அது ஒரு விநோதம் தான்! பண்டிதர்முன் பிரசங்கம் முடிந்ததும் யாராவது எதிர்ப்பட்டால் 'எப்படி ஐயா! என்னுடைய பிரசங்கம்? எல்லாம் சரிதான் குரல் மாத்திரம் நன்றாயில்லை' என்ற கேள்வியையும் மறுமொழியையும் ஆமோதித்துத்தான் ஆகவேண்டும்.

* * *

ஒருநாள் பகல் பன்னிரண்டு மணியளவில், ஒரு நாளுமில்லாத திருநாளாக தபாற்காரன் இக்கடிதத்தைப் பண்டிதரிடம் கொடுத்தான். பண்டிதர் பரமானந்தத்துடன் கடிதத்தை பிரித்துப் படித்தார். மறுகணம் ஆனந்த தாண்டவம் தான். அதிர்ஷடம் என்றால் யாருக்கும் கிடைக்கக் கூடியதா? ஓடோடியும் சமையலறைக்குள் சென்று "பார்த்தாயாடி! காலமே காகம் கரைந்துதே! இப்போ எனக்கு அழைப்பு வந்திருக்கு. உங்கப்பா பிள்ளைக்கு எப்பவாவது இந்தமாதிரி கிடைத்ததா? அதெல்லாம் அதிர்ஷ்டமல்லடி வேணும்"

கடிதம்

'ஈழகேசரி' பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

தங்களால் வெளியிடப்படும் கல்வியனுபந்தத்தில் சேர்ந்திருக்கும் "ஈழகேசரி இளைஞர் சங்கத்தார்" வருகிற சித்திரை மாதம் ஒரு மகாநாடு கூடப்போகிறார்களென்றறிந்து மிகுந்த சந்தோஷமுற்றேன். தமிழ் மாணவர் உலகில் இது ஒரு புதிய சங்கதி. வாராவாரம் நான் 'தாத்தா'வின் செய்திகளைப் படிக்கும்போதெல்லாம் இளைஞர்கள் ஊக்கத்தைக் கவனித்து வருகிறேன். அவர்களுடைய கட்டுரைகளும் கதைகளுமே சங்கத்தின் முன்னேற்றத்திற்கு அறிகுறியாய் இருக்கின்றன.

மகாநாட்டிலன்று பேச்சுப் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கப்படுமென்று அறிவித்திருப்பது போற்றத்தக்க செய்தியொன்றாகும். இந்த இளைஞர் சங்கத்தினரும் சங்கமும் இவ்வித முன்னேற்ற வழிகளிலீடுபட்டு வெற்றிபெறவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். "தாத்தா" நீடூழி வாழக்கடவர்.

கொழும்பு,
15-2-39.

இப்படிக்கு,
க. மாணிக்கவாசகன்.

என்று ஆநந்த நிர்த்தனம் செய்கிறார் பண்டிதர் அடுப்பங்கரையில். இந்தத் திருவிளையாடலுக்குக் காரணம் என்னவெனில் ஓர் பகிரங்கக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி பண்டிதருக்கு யாரோ எழுதியிருந்ததுதான்.

ஊரில் வண்ணான் வீடுமுதல் நாவிதன் வீடுவரையில் பண்டிதரின் அழைப்பு வைபவத்தைப்பற்றி அறிந்திருந்தார்கள். இதைவிட வீட்டில் பண்டிதர், சபையில் எப்படி இருப்பது? எப்படி எழும்புவது? எங்ஙனம் பேசுவது? எவ்விதம் சிரிப்பது? என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டுதானிருக்கிறார். பாவம்! அக்கடிதத்தின் உண்மைச் சமாசாரத்தை அவர் எப்படி அறிவார்?

* * *

பதினோராந்திகதி பகல். அதேநேரம் அதே தபாற்காரன். ஒரு கடிதத்தை பண்டிதரிடம் சமர்ப்பித்தான். அவசரத்துடன் பிரித்துப் படித்தார் ............ அந்தோ! பண்டிதர் பதறுகிறார், பாவம்! அகம் குழைந்து, இடை தளர்ந்து மெய் மறந்து திறந்த கண்கள் அப்படியேயிருக்கு. காதுகளும் அவ்விதமாக, பண்டிதர் சாய்ந்து புரண்டார் சாய்வு நாற்காலியில். இந்த நிலைமையை யாரால்தான் சமாளிக்கமுடியும்? இத்தகைய ஆர்ப்பாட்டங்களெல்லாம் பண்டிதர் செய்துகொண்டிருக்க அவரைவிட்டு வேறு ஆளைத் தேர்ந்தெடுப்பதென்றால் எத்தகைய அநீதி.

என்னவெனில் கடிதம் எழுதியது இவருடைய விரோதிகளில் ஒருவர்தான் என்று உங்கட்கும் விளங்குந் தானே!

நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வே றென்றணையார், வஞ்சகத்தார் அல்லரவர் மார்க்கமென்றே பைங்கிளியே.

# மாடு மேய்த்தவர் மகுடம் தரித்த விந்தை

சென்ற செவ்வாய்க்கிழமையன்று (7-2-39) பரோடா மகாராஜா காலமானார். ஆனால் அவருடைய வாழ்க்கைச் சரித்திரம் அதிசயம் நிறைந்தது என்பது பலருக்குத் தெரியவே தெரியாது.

60 வருஷத்திற்குமேல் அவர் ஆட்சி புரிந்ததே சரித்திர அதிசயங்களில், முதன்மை ஸ்தானம் பெறக் கூடிய அபூர்வ சம்பவமாகும். ஆனால், அவர் மாடு மேய்க்கும் பையனாயிருந்து மகுடம் தரிக்கும் மன்னனாக மாறிய கதை விசித்திரம் நிறைந்தது. அதை 'லண்டன் பீபிள்' பத்திரிகை பின்வருமாறு வர்ணிக்கிறது:—

சுமார் 60 வருஷத்திற்கு முன் ஒருநாள், சூரிய வெப்பம் தாங்கமுடியாமல் ஒரு 6 வயதுச் சிறுவன் மரத்தடியில் படுத்துறங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய மாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அந்தப் பையன் வெயிலால் வாடாமல் அவன் தலைமீது பெரிய பாம்பொன்று படமெடுத்துக் காத்தது.

* *

அந்த வழியாகச் சென்ற நான்கு பிரயாணிகள் இந்த அதிசயக் காட்சியைக் கண்டு பிரமித்தனர். ஆனால், பையன் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். பிரயாணிகள் அருகிலிருந்த கிராமத்திற்குச் சென்று சிறுவன் யார் என்று விசாரித்தனர். மாலைப்பொழுதானவுடன் சிறுவன் வீடு திரும்பினான். அவனுடைய அருமைத் தாய் அவனை ஸ்நாநம் செய்து புதுத்துணி உடுத்தச் சொன்னாள். புது வஸ்திரதாரணத்தின் நோக்கமென்ன என்பது சிறுவனுக்கு விளங்கவில்லை.

* * *

புது வஸ்திரமணிந்து தகப்பனாரிடம் சென்றான். அங்கு நான்கு அந்நியர்கள் அமர்ந்திருந்தனர். "இந்த நால்வருடன் நீ நாளைக்குப் போகவேண்டும்," என்று தகப்பனார் பிள்ளையிடம் கூறினார்.

"எங்கு?" என்றான் பையன்.

"நீ ராஜாவாகப்போகிறாய்," என்றார் தகப்பனார். பையன் பிரமித்துப்போனான். அவனை அழைத்துச் சென்றவர்கள் மகாராணி யமுனாபாயின் ஆட்கள். மாடு மேய்த்த சிறுவனை யமுனாபாய் ஸ்வீகாரம் செய்து கொண்டதால் அவன் பரோடாவின் மன்னன் ஆனான்.

ஆனால் சிறுவன் சயாஜி சுலபமாகப் பட்டத்துக்கு வர முடியவில்லை. பரோடா மன்னனை தத்து எடுத்துக் கொண்டவர் இறந்தவுடன் மல் ஹரிராவ் என்பவர் அரசுரிமையை ஏற்றுக்கொண்டு உரிமை பெற்ற இளவரசரைச் சிறையிலிட்டான். ஆனால், ரெஸிடெண்டுக்கு விஷமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு மல்ஹரி ராவ் விலக்கப்பட்டவுடன் சயாஜி ராவ் பட்டத்திற்கு வந்தார்.

பரோடா மன்னர் சிறுபிராயத்தில் தீவிரவாதியாயிருந்தவர். பரோடா கலாசாலையில் புரட்சி வீரர் அரவிந்தரை பிரின்ஸிபாலாக வைத்திருந்தார். லார்டு கர்ஸன் வைஸ்ராயாக இருந்த காலத்தில் நடந்த தர்பாரில் வைஸ்ராயிடம் சென்று வணங்கிவிட்டுத் திரும்புகையில் சம்பிரதாயத்திற்கு விரோதமாக தர்பாருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு திரும்பி வந்ததனால் பிரிட்டிஷ் சர்க்கார் இவரிடம் விசேஷ அருவருப்புக் காட்டியதாகக் கூறுவதுண்டு.

* * *

பரோடா சமஸ்தான விஸ்தீரணம் 8,000 சதுர மைல். இங்கு 2,000 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. கட்டாய ஆரம்பக் கல்வித்திட்டம் சமஸ்தானத்தில் அமுலிலிருக்கிறது. காலஞ் சென்ற பரோடா மகாராஜா ஹரிஜனங்களின் சிறந்த நண்பர் என்று ஹரிஜனத்தலைவர் டாக்டர் அம்பேத்கார் உருக்கமாகக் கூறியிருக்கிறார்.

பரோடா மன்னர் தம் ஆட்சியின் வைர விழா கொண்டாடுகையில் ஹரிஜனங்கள் நிலையை உயர்த்துவதற்கு 7,50,000 பவுண் கொடுத்து ஒரு நிதி ஆரம்பித்தார்.

* * *

இவ்வளவு சிறப்பாக ஆட்சிபுரிந்த பரந்தநோக்கமுள்ள ஒரு சமஸ்தானாதிபதியை இன்று இந்தியா இழந்துவிட்டது.

—"ஹிந்துஸ்தான்"

## சிறுவர் போட்டி 2/39

### சரியான விடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | 2 தா | 3 தி | ■ | 4 மா | 5 மி |
| 6 தி | மி | ல | 7 ர் | ■ | டி |
| 8 வி | ரை | க | கா | 9 நா | ■ |
| ர | ■ | 10 ம் | த் | த | 11 சி |
| 12 தி | 13 சை | ■ | 14 தி | ன் | றி |
| ■ | 15 கை | க் | கை | ■ | து |

[சரியானவிடை அனுப்பியவர்களுள் கீழ்க்கண்ட இருவரும் அதிஷ்டச் சீட்டுமூலம் பரிசு பெறுகின்றனர்.]

I

சி. அரசரத்தினம்,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

II

செ. சிவரத்தினம்,
வேலணை மேற்கு.

# சிலந்தி வலை பின்னியது

[ உண்மைச் சம்பவம் ]

"வ. இ."

சென்ற இருபத்தாறுந் திகதி மாலை ஐந்து மணியளவில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்தேன். மாலையில் நான் கடற்கரைக்குச் செல்வதில்லை. கடற்கரையும் அயலிலே யில்லை. அப்பா சொல்லுகிறார்: 'தம்பி! நாங்கள் கோடீஸ்வரர்களல்ல, உலாத்திற்குச் செல்ல; குடிக்கக் கஞ்சியில்லை! உலாத்து வேறையா?' என்று. ஆதலால் கையிற் பிரம்பை யெடுத்துக்கொண்டு நான் உலாவச் செல்வதில்லை. வீட்டுத் தோட்டப் புறத்தில் தான் சுற்றுவேன்.

வழக்கம்போல அன்றும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், தோட்டத்திற்குச் சென்றேன். அங்கே நான் கண்ட காட்சி அரை மணித்தியாலத்துக்கு மேல் என்னை அங்கேயே நிற்கச் செய்துவிட்டது.

வீட்டின் பின்புறத்தில் தோட்டமிருந்தது. தாழ்வாரத்தில் ஒரு எலுமிச்சை நின்றது. தாழ்வாரத்திலிருந்து எலுமிச்சைக்கு நூல் பாய்ச்சி, கூடு பின்னிக்கொண்டிருந்தது ஒரு சிலந்தி. அது கூடு பின்னிய காட்சியே என்னைப் பரவசமாக்கியது நீங்கள் சிலந்தி வலையைக் கண்டிருப்பீர்கள்; ஆனால், அதைப் பின்னக் கண்டிருக்கிறீர்களா?

வண்டிச் சில்லிலுள்ள சிலைக்கம்புகள்தா னுங்களுக்குத் தெரியுமே. அதுபோல நூலைக் கட்டியிருந்தது. சும்மா கட்டிவிடவில்லை. எல்லாம் ஒரே சமதூரத்திலமைந்திருந்தன. வண்டிச் சக்கரஞ் செய்பவர் தாமும் அளவுகோல் கொண்டு செய்வர். இந்தச் சிலந்தி அளவுகோலையும் தோற்கடிக்கும்படியாக நூலைக் கட்டியிருந்ததை நினைக்க, கடவுளின் விநோத சிருஷ்டியை வியக்காமலிருக்க முடியவில்லை.

நான் அந்தக் கூட்டைக் கண்டபொழுது நீளமாக ஓடிய நூல்களில் சுமார் அரை அங்குலம் வரை இடைவெளியுள்ள, நூல் வரிசைகளைத் தூரத்துக்குத் தூரமாக வட்டமாகப் பின்னியிருந்தது. வலையின் மையத்திலும் அடர்த்தியாகச் சிறிது பின்னியிருந்தது. பின்னர் வெளிப்புறத்தில் வட்டமாக ஓடிய நூல்வழியே ஓடிக்கொண்டு சிலைக்கம்பு நூல்வழியே, (நீளமாக ஓடிய நூலைச் சிலைக்கம்பு நூலென்றே எழுதுவோம்) பின்னத் தொடங்கியது. தான் பின்ன எட்டாத தூரமெல்லாம் தானிருந்த நூலை 'றப்பர்' போல இழுத்திழுத்துப் பாய்ந்து பின்னியது.

எழுதுவதற்குத் தான் இத்தனை நேரம். இதற்கிடையில் அரைவாசிக்குமேல் அது பின்னிவிட்டது. நூலுக்கு நூல் பாய்ந்து 'டக் - டக்'கென்று நூலை ஒட்டிக்கொண்டு செல்வதைப் பார்த்து லயித்துவிட்டேன். பின்னும் எழுதுகிறேன்; அளவு தவறாமல் அழகாக அது பின்னியதை நீங்கள் பார்த்தாலொழிய நான் எழுதி முடியாது.

பின்னிக்கொண்டு வரும்பொழுது ஒரு கொசுகு வலையில் சிக்கிக்கொண்டு துடித்தது. துடித்தது என்னு முன்னர் சொல்லி வைத்தாற்போல அங்கே தோன்றியது சிலந்தி. சிறிது நேரம் கொசுகுக்கும் சிலந்திக்கும் போராட்டம்! கொசுகை உண்ணப்போகிறதாக்கும் என்று கவனித்தேன். சிலந்தி கொசுகைத் தன் கால்களால் உருட்டிக்கொண்டேயிருந்தது. உருட்டிற்று; உருட்டிற்று சுமார் ஐந்து நிமிடம்வரை உருட்டிற்று. பின்னர் அதை விட்டுவிட்டு முன்போல் பின்னத் தொடங்கியது. கொசுகு வலையோடு பிணிக்கப்பட்டிருந்தது. சிலந்தி அதை உண்ணாமல் தன் முயற்சியில் கண்ணாய்ச் சென்றதைக் கண்டபொழுது,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

என்ற செய்யுள் எனக்கு ஞாபகம் வந்தது. நம்மிலும் அறிவு குறைந்த பிராணியின் முயற்சித் திறனைக் கண்டு தெருநீளம் திரியும் சோம்பேறிகள் திருந்தார்களா என்றெண்ணினேன்.

அந்த நேரம் அதற்குப் பசியில்லாதிருந்ததால்தான் தன் தொழிலிற் சென்றதென்று நீங்கள் கேட்கலாம்; எனக்கும் இவ்வையம் தோன்றியதுதான். ஆனால் பின்னர் நடந்த சம்பவத்தால் துணிவடைந்தேன். பின்னர் வலையில் விழுந்த இரண்டு கொசுக்களை அது உண்டது.

அது பின்னிக்கொண்டிருக்கும்பொழுது நான் ஒரு நூலில் தொட்டேன். உடனே அது வலையின் நடுவில் போய் பதுங்கிக்கொண்டது. அப்படியே சிறிது நேரம் இருந்துவிட்டு வலையின் ஒரு புறத்தை, 'பிடில்' வாத்தியகாரர் சுதி சேர்ப்பதுபோலத் தூக்கித் தூக்கிக் குலுக்கியது. இப்படியே வலையின் எல்லாப் புறங்களையும் குலுக்கிவிட்டுப் பின்னரும் பின்னத் தொடங்கியது. அப்படி வலையை ஆட்டுவதால் பின்னரும் அபாயம் செய்த ஜந்து இருக்குமோ வென்பதை அது அறியும் போலும்.

பிறந்த ஒவ்வொரு பிராணியின் தலையின் மேலும் 'அபாயம்' என்றொரு பாறுங்கல்லு தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதை அவை அறியாமல் பெருஞ் சந்தோஷமாயிருக்கின்றன. பாறுங்கல் விழுந்தபின்தான் பதைக்கின்றன.

சிலந்தி வலைபின்னி முடித்துவிட்டிருந்தது. அருகேயிருந்த முருக்கமரத்திலிருந்து ஒரு இலை அதன் கூட்டில் இடிபோல் விழுந்து பிய்த்துச் சென்றது. சிலந்தி நூல்மூலம் எலுமிச்சையில் ஓடிவிட்டது. அந்தக் கூட்டைப்போலவே நானும் பிய்ந்த மனத்துடன் அங்கு நின்றகன்றேன். ஆனால், நாட்டுச் சீவன சாஸ்திர பாடத்தில் சிலந்தியைப்பற்றி உபாத்தியாயர்கள் இடித்திடித்து உபதேசித்ததும், பலநாள் பாடுபட்டு நான் படித்ததும் நீர்மேலெழுத்தான என்னெஞ்சில் அன்றைய சம்பவம் கன்மேலெழுத்தானது.

பச்சைகண்ட நாட்டிற் பறக்கும்உனைப் போற்பறந்தேன்; இச்சையெல்லாம் அண்ணற் கியம்பிவா பைங்கிளியே.

# நட்பு

ஒருவருடன் ஒருவர் சினேகம் கொள்வதற்கு பலவகையான காரணங்களுண்டு. அந்நட்பு நல்லநட்பு, தீயநட்பு என இரண்டுபிரிவானது. நல்லவர்களுடைய சினேகம் சந்தோஷமானது. தீயவர்களுடைய சினேகம் துன்பமானது.

ஒரு பாம்பை வீட்டில் வைத்து பாலும் தேனும் வார்த்து வளர்த்து வந்தாலும், ஒருமுறை கோபம் வரச் செய்வோமானால் அது நம்மையும் நம்மைச்சேர்ந்தோரையும் கட்டாயம் கடிக்கும். ஒரு நாயை வீட்டில்வைத்து வளர்த்துவந்தால் அது நமது வீட்டைக் காக்கும். நாம் அடித்தாலும் தன் வாலை ஆட்டிக்கொண்டு ஓடுமே அல்லாது கடிக்கமாட்டாது. இது போலவே தீயவர்களுடைய சினேகமும் நல்லவர்களுடைய சிநேகமும் இருக்கும்.

தீயநட்புடையவர்களோடு கூடினால் களவு சூது பொய் முதலிய பாவங்களை நாம் அடையவேண்டும். இப்பாவங்களால் இந்த உலகத்தில் கெட்டவனும், புகழ்ச்சி இல்லாதவனும் சீவித்து மேல் உலோகத்தில் கொடிய நரகத்தை அடையவேண்டும். நல்லநட்பு உடையவர்களோடு கூடினால் பெரியவர்களைத் தரிசித்தும் நல்லகாரியங்களைச் செய்தும் இந்த உலகத்தில் புகழ் உடையவனும் நல்லவனும் இருந்து சீவித்து மறு உலகத்தில் மோட்சத்தை அடைவான்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

என்ற பாடலை முற்காலத்தில் இருந்த பெரியார் பாடினார். ஆதலால் நாம் நல்லவரோடு சேர்ந்து நல்ல சிநேகத்தைச் செய்யவேண்டும்.

கோ. ஐயாத்துரை
VI ம் வகுப்பு மாணவன்
இருபிட்டி அ. மி. பாடசாலை

## கல்வி அனுபந்தம்

(சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன.)

சென்றவருட 'ஈழகேசரி கல்வி அனுபந்த'ப் பிரதிகள் முழுவதும் சேர்த்துப் புத்தக ரூபமாகக் கட்டப்பெற்றிருக்கின்றது

விலை ரூபா 2-00
தபாற்செலவு சதம் 35
'ஈழகேசரி' நிலையம், சுன்னாகம்

--- இங்கே கத்தரிக்க ---

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

## முதலாண்டு மகாநாடு

### இளைஞர் பேச்சுப் போட்டி விண்ணப்பம்

அன்பார்ந்த தாத்தா,

எங்கள் சங்கத்தின் முதலாண்டு மகாநாட்டில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள என்னையும் ஒருவராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்
..............................
(கையொப்பம்)

முழுப் பெயர் ..............................
பெற்றோர் பெயர் ..............................
வயது .................. பிறந்த திகதி ..............................
பாடசாலை ..............................
விலாசம் ..............................
..............................
வகுப்பு ..............................
சந்தா எண் ..............................
பேசப்போகும் விஷயம் ..............................
திகதி ..............................

..............................
தலைமை ஆசிரியர் கையொப்பம்

[இந்தப் பத்திரத்தை நிரப்பி, "தாத்தா", C/o 'ஈழகேசரி' சுன்னாகம் என்ற விலாசத்துக்கு 1-4-39-க்குப் பிந்தாது அனுப்பி வைக்கவேண்டும். உறையின்மேல் ஒரு பக்கத்தில் பேச்சுப்போட்டி என்று குறிப்பிடவும்.]

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

செல்வக்குழந்தைகாள்,

இரண்டு நாட்களாகத் தாத்தாவுக்குத் தலைவலி பொறுக்கமுடியவில்லை. சுக்குப் போட்டுக் காப்பி வைத்துத் தந்தாள் பாட்டி; அதற்கும் கேட்கமாட்டேனென்கிறது.

இருந்தாற்போலிருந்து என் பேரன் பேத்திகளில் பலர் பெரிய கவிகளாகிவிட்டனர். கவியென்றவுடன் வேறு அர்த்தம் கொண்டுவிடாதீர்கள்! நான் சொன்னது பாட்டுப் பாடும் புலவர்களென்றுதான்! வெண்பாக்களும், கலித்துறைகளும், விருத்தங்களுமாகக் கணக்கு வழக்கில்லாமல் வெளிவந்தவண்ணமாயிருக்கிறது பாருங்கள். ஒரு பேரனுக்குத் தாத்தாமேலே கோபம் போலிருக்கிறது! எப்படியாவது தலைவலியை வருவித்துவிடவேண்டுமென்று தீர்மானித்து கல்லொழுங்கையில் போன கட்டைவண்டிமாதிரிப் பாட்டுப்பாடியிருக்கிறான்! அப்படியானால் தலைவலி வராமல்தான் என்ன செய்யும்? ஆனால் சிலர் மிகவும் அழகான பாட்டுக்களைப் பாடியிருக்கிறார்களென்று பார்த்ததும் நான் அளவற்ற மகிழ்ச்சிகொண்டேன். என்னுடைய பேரன் பேத்திகள் இப்படிக் கவிகளாகிவிட்டால் எனக்கு இறும்பூது வராமலிருக்குமா? இவைகளிற் சில காலத்துக்குக் காலம் எங்கள் கல்வி அனுபந்தத்தில் வெளிவரும். இன்னும் அழகான பாட்டுக்கள் கிடைத்தால் எங்கள் முதலாண்டு மகாநாட்டிலன்று வெளிவரும் "கல்வி மலரி"ல பிரசுரிக்க இடம்பெறும்.

பேரன் பேத்திமாரெல்லாம் இந்தக் 'கல்வி மல'ரை மறந்துவிடவேண்டாம். கட்டுரைகள், கவிதைகள், கதைகள், படங்கள் எல்லாம் பிரத்தியோகமாகப் பிரசுரிக்கப்பட எங்கள் சங்க இளைஞர்களுக்கு உரிமையுண்டு. தங்கள் புகைப்படங்கள் பிரசரிக்க விரும்பும் அங்கத்தவர் குறிப்பிட்ட தேதி (1-4-39)க்கு முன் அந்தப் படங்களை அனுப்பிவைத்தால் கல்விமலரில் பிரசுரித்து வைக்கலாம். இனி, மகாநாடு, பேச்சுப் போட்டி, முதலியவற்றை மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நான் அறிவித்தல் செய்து இன்றுவரையில் ஒரு பேத்தி 15 சதம் சேர்த்துவிட்டதாகத் தெரிவிக்கிறாள்; இன்னொருபேரன்—சின்ன வயது — 8 சதம் சேர்த்துவிட்டானும்! வேறொரு அண்ணன் தங்கைச்சி இருவரும் 23 சதம் வைத்திருக்கிறார்களாம். சரி நீங்கள் இன்றுவரை எத்தனை சதம் சேர்த்துவிட்டீர்கள்? எங்கே பார்க்கலாம் விரைவுப் பயிற்சியை!

மிகவும் கிரமமாக கட்டுரைகளும், கடிதங்களும் எழுதிவந்த சில பேரன் பேத்திகளிடமிருந்து சில நாட்களாக நாமொன்றும் கேள்விப்படவில்லை. பாட்டிதான் என்னிலும் பார்க்க வருத்தப்படுகிறாள். ஆகையால் கீழ்க் கண்டவர்கள் தங்கள் தற்போதைய விலாசத்தைத் தெரிவிப்பதோடு உடனே கடிதமெழுதுவார்களென்று நம்புகின்றேன்.

C. சற்குணானந்தன் 17; சு. தங்கமணி 23;
ம. பத்மாவதி 31; சி. சிவபாதம் 116;
அ. ஜயேந்திரன் 132; சு. சுப்புலெஷ்மி 147;

தாத்தா.

## தாத்தா பதில்

த. ச. சண்முகதாசன் (கட்டுடை) பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரெல்லோரும் எங்கள் சங்கத்தில் சேர்ந்துகொள்ளலாம். விண்ணப் பத்திரத்தை ஒழுங்காக நிரப்பியனுப்ப வேண்டியதுதான். முதலாண்டு மகாநாட்டில் பேச்சுப் போட்டியில் இளைஞர் சங்க அங்கத்தினர் மாத்திரம் பங்குபற்றலாம். இதற்கு விண்ணப் பத்திரம் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அதில் கண்ட விபரங்களெல்லாம் பூர்த்தியாக வேண்டும். பாட்சாலைத் தலைமையாசிரியர் கையொப்பம் இன்றியமையாதது.

சே. சீவரெத்தினம் (143) வேலணை வாசிகள் பெரிய தமிழ்ப் புலவர்களின் சந்ததியென்று கேள்வி. அதற்கிலக்காக நீர் இலங்குகின்றீர். உம்முடைய கடிதங்கள் என்னைப் பரவசப்படுத்துகின்றன உம்போன்ற இளைஞர்தான் எங்கள் சங்கத்தை மேல் நிலையடையச் செய்பவர்கள். இன்னும் ஊக்கத்தோடு பலசங்கத்தவர்களைச் சேர்த்து, இளைஞர் மகாநாட்டுக்கும் வந்து விடவேண்டும்.

சி. அரசரத்தினம் (180) நான் எங்கள் சங்கத்தில் திறமையுள்ள சித்திரக்காரர் இல்லையென்று வைத்திருந்த அபிப்பிராயத்தை மாற்றி விடுவீர் போலிருக்கிறதே! உமது சித்திரம் நன்றாகத்தானிருக்கிறது. இன்னும் சில பேரன் பேத்திமார் அனுப்பக்கூடுமல்லவா? எல்லாம் கிடைத்தபின்னரே முடிவான அபிப்பிராயம் தெரிவிக்கலாம்.

## புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

| | | | |
|---|---|---|---|
| 200. | ந. இ. இரத்தினம் | 205. | நா. இராசையா |
| 201. | கோ. ஐயாத்துரை | 206. | ஐ. இராசரத்தினம் |
| 202. | சி. சிவானந்தம் | 207. | சு. இராசரத்தினம் |
| 203. | மு. கந்தசாமி | 208. | நா. தம்பிராசா |
| 204. | ம. அம்பலவாணர் | 209. | எ. செல்வத்துரை |

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" ததிலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி' யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு பிப்ரவரி 19உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது